ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2223/3 - 2021 අප්‍රේල් මස 13 වැනි අඟහරුවාදා - 2021.04.13

*2223/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 11/1979* (iii)

**1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்**

*அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2021, ஏப்பிறல் 10.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (மட்டுமீறிய ஒழுங்கமைப்புகளைத் தடைசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. நாட்டின் சமாதானத்தைத் தொடர்வதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கென நன்னோக்குடனும் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் நலனிலும் செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதில், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான ஒழுங்கமைப்புகள் இத்தால் தடைசெய்யப்படுகின்றன.

3. ஆளெவரும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளின் அல்லது ஒழுங்கமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது அதன் சார்பில் செயலாற்றுகின்ற வேறேதேனும் ஒழுங்கமைப்பின் கீழே குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் எவற்றுடனும் தொடர்புபட்டிருத்தலோ அல்லது அவற்றில் சம்பந்தப்பட்டிருத்தலோ அல்லது அவற்றுடன் தொடர்புபட்டிருப்பதாக அல்லது அவற்றில் சம்பந்தப்பட்டிருப்பதாக நியாயமான முறையில் சந்தேகிக்கப்படுதலோ ஆகாது-

(அ) உறுப்பினரொருவராக அல்லது அங்கத்தவரொருவராக இருத்தலாகாது;

(ஆ) அதற்குத் தலைமைத்துவம் அளித்தலாகாது;

(இ) சீருடையை, உடையை, சின்னத்தை, தனிக்குறியை அல்லது கொடியை அணிதலோ, வெளிக்காட்டுதலோ, ஏந்துதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது;

(ஈ) கூட்டமொன்றை அழைத்தலோ, கூட்டுதலோ, நடாத்துதலோ அல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது;

(உ) உறுப்பாண்மையைப் பெறுதலோ அல்லது அதைச் சேருதலோ ஆகாது;

(ஊ) ஓர் உறுப்பினருக்கு, அங்கத்தவருக்கு அல்லது வேறெவரேனும் இணையாளருக்குப் புகலிடமளித்தலோ, அவரை மறைத்து வைத்தலோ அல்லது அவருக்கு உதவுதலோ ஆகாது;

(எ) மேம்பாட்டுக்கு உதவுதலோ, அதனை ஊக்குவித்தலோ, அதற்கு ஆதரவளித்தலோ, மதியுரையளித்தலோ, உதவுதலோ அல்லது அதன் சார்பில் செயலாற்றுதலோ ஆகாது;

(ஏ) ஏதேனும் செயற்பாட்டை அல்லது நிகழ்வை ஒழுங்குபடுத்தலோஅல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது;

(ஐ) பணத்தை அல்லது பொருட்களை நன்கொடையளித்தலோ அல்லது உதவுதொகையளித்தலோ ஆகாது;

(ஒ) அதற்காக அல்லது அதன் பொருட்களைப் பெறுதலோ, களஞ்சியப்படுத்தலோ, இடம்பெயர்த்தலோ, உடைமையில் வைத்திருத்தலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது;

(ஓ) நோக்கத்தை ஊக்குவித்தலோ அல்லது பிரதிநிதித்துவப்படுத்தலோ ஆகாது;

(ஔ) அதனோடு ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது ; அல்லது

(க) அதன்சார்பில் தகவலைப் பரப்புவித்தலாகாது,

4. இவ்வொழுங்குவிதிகள் 3 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அவருக்கு இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

5. இவ்வொழுங்கு விதிகள் 3 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகத் தவறொன்றைப் புரிவதற்குச் சதிசெய்கின்ற, எத்தனிக்கின்ற, உடந்தையாகவிருக்கின்ற அல்லது தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ் செய்யும் ஏதேனும் நடத்தையில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் அவருக்கு பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து அப்போது அத்தவறைப் புரிவதற்கு நேரடியாகப் பொறுப்பாகவுள்ளஆட்களுடன் சேர்த்து மேலதிகமாக —

(i) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் பிரதான நிறைவேற்றலுவலரும்;

(ii) அவ்வாட்கள் குழு பங்காண்மையொன்றாகவிருப்பின், அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும் பிரதான நிறைவேற்றலுவலரும் ; அத்துடன்

(iii) அவ்வாட்கள் குழு ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய ஆட்கள் குழுவின், தொகுதியின் அல்லது ஒழுங்கமைப்பின் தலைவரும், அத்தகைய குழுவின், தொகுதியின் அல்லது ஒழுங்கமைப்பின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ளஅக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும்.

அத்தகைய ஆட்கள் குழுவுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. சனாதிபதி, தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய விசாரணைக்குப் பின்னர் எவரேனுமாள் இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்புகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படுகின்ற எவையேனும் பணங்களை, பிணைப்பொறுப்புக்களை அல்லது வரவுகளைக் கட்டுக்காப்பில் வைத்திருக்கின்றாரெனத் திருப்திப்படுமிடத்து சனாதிபதி, எழுத்திலான கட்டளையின் மூலம், அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலுள்ளவாறான அத்தகைய பணங்களும், பிணைப்பொறுப்புக்களும், வரவுகளும் அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட பின்னர் அவரது கட்டுக்காப்பினுள் வரக்கூடிய எவையேனும் பணங்களும், பிணைப்பொறுப்புக்களும், வரவுகளும் மற்றும் அத்தகைய ஒழுங்கமைப்புக்குச் சொந்தமான வேறேதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

8. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், பாதுகாப்பு என்ற விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படுவதும், மனிதாபிமான உதவியளிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதுமான ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பின் உரிமையை எவ்வழியிலும் பாதிக்காதெனவெளிப்படுத்தப்படுகின்றது

[ஒழுங்கு விதி 2]

**அட்டவணை**

1. ஐக்கிய தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (UTJ)
2. சிலோன் தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (CTJ)
3. சிறீலங்கா தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (SLTJ)
4. அகில இலங்கை தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ACTJ)
5. ஜம்மியதுல் அன்ஸாரி சுன்னதுல் மொஹமதியா (JASM) மறுபெயர் ஜம்மாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹமதியா ஒழுங்கமைப்பு மறுபெயர் அகில இலங்கை ஜம் - ஈ - அது அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா மறுபெயர் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா கழகம் மறுபெயர் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா
6. தாறுல் அதர் மறுபெயர் ஜாமிஉல் அதர் பள்ளிவாசல் மறுபெயர் தாறுல் அதர் குரான் மத்ரச மறுபெயர் தாறுல் அதர் அத்தபாவிய்யா
7. சிறீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM) மறுபெயர் ஜம்இய்யா
8. ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு (ISIS) மறுபெயர் அல் - தௌலா அல் - இஸ்லாமியா தௌலா இஸ்லாமியா
9. அல்கய்தா
10. சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு மறுபெயர் சேவ் த பேர்ள் சங்கம்
11. சுப்பர் முஸ்லிம்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.